

முத்து

கல்வி வளர்ப்போம்

T
N73;1
186037

கல்வி
வளர்ப்போம்

தமிழரசு

1—1—1973 இதழின்

இலவச இணைப்பு

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186037
சென்னை 600 008

பதிப்புரை

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்' கற்கத் தக்க கல்வியை, மக்கள் அனைவரும் இலவசமாகப் பெறுமாறு செய்து அறிவொளியைப் பரப்புவதில் அற்புதமான முன்னேற்றம் கண்டு வருகிறது இன்றையத் தமிழகம்.

கல்வியின் பயன் மக்களின் அறிவாற்றலை வளர்ப்பதுடன், மக்களை மேம்படுத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. எல்லா வகையான முன்னேற்றங்களுக்கும் இதுவே அடிப்படைக் கருவியாகவும் விளங்குகின்றது. நாட்டின் செல்வ வளங்களைப் பெருக்குவதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் கல்வி, அறிவியல், பொறியியல் இவை எல்லாம் ஆற்றல் மிக்க கருவிகளாகச் செயல்படக்கூடியவை. இயற்கை வளங்கள் போதிய அளவு இல்லாத குறையைக் கூட, இவற்றின் மூலம் நிறைவு செய்ய இயலும்.

கல்வியைப் பரப்புவதில் தமிழகம் அரிய முன்னேற்றம் கண்டு வருகிறது; எனினும் இதில் பல இடையூறுகளும் குறுக்கிடுகின்றன. தொடக்கக் கல்வியில் மட்டும் சுமார் சரிபாதிப் பேர்களும், மற்ற வகுப்புகளிலும் கணிசமான அளவினரும் படிப்பை நடுவில் விட்டு விடுகின்ற நிலைமை இருந்து வருகின்றது; படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் வளரும் நிலை உள்ளது. நாட்டில் உண்மை நிலவரங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற கல்வி முறையை உருவாக்குதல் இன்றியமையாததாகின்றது.

இந்தச் சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு காணும் வழி முறைகளையும் வருங்காலத்தில் கல்வி வளர்ச்சி எவ்வகையில் அமைய வேண்டும்

என்பதையும் விளக்கிக் கூறுகிறது தமிழ்நாடு திட்டக்குழுவின் செயல் அணியின் அறிக்கை.

அறிவின் எல்லைகளை மேலும் விரிவாக்க உதவும் செயற் குறிப்புகள், சமூகத்தில் வசதிக் குறைவான பிரிவு மக்களுக்கு ஈடு செய்யும் முறையில் கல்வி வசதி, தேர்வு முறையில் சீர்திருத்தம், கல்வித் திட்டச் செயற்குழு அமைப்பது ஆகியன குறித்தும் இவ்வறிக்கை எடுத்துரைக்கிறது.

1972-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரையான பன்னிரண்டு ஆண்டுக் காலத்துக்குக் கல்வி வளர்ச்சிக்கான தொலை நோக்குத் திட்ட விவரங்களைத் தொகுத்து ‘ தமிழரசு ’ இதழுடன் இலவச இணைப்பாக வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

சென்னை, செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
1—1—73. தமிழ்நாடு அரசு.

கல்வி வளர்ப்போம்

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் செயல் அணி 1971 அக்டோபர் 20-ஆம் நாள் துவக்கப்பட்டது. இந்தச் செயல் அணியின் தலைவர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா செயல் அணியின் அறிக்கையை 1972 ஜூலை 27-ல் திட்டக் குழுவின் தலைவர், முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் அளித்தார். 1972-லிருந்து 1984 வரை உள்ள 12 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்தினைச் செயல் அணி தனது அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறது.

தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்பு உரிமைக்கு ஏற்ற வகையில் கல்வி உரிமை சரிப்படுத்தப் பட வேண்டும் என்பதே அடிப்படையான கருத்து என்று அறிக்கை கூறுகின்றது. இக் குறிக்கோளை அடைவதற்காக 6-லிருந்து 14 வயது வரை அனைவருக்கும் முழுமையான இலவசக் கல்வி, பத்தாண்டுப் பள்ளிப் படிப்பு முறை, உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொழில் சார்புடையதாக ஆக்குதல், கட்டண முறை உள்ள உயர்தரக் கல்வி, 2+2+2 அல்லது 3 ஆண்டுகள் என்ற வகையில் கல்லூரிக் கல்வி, கிராமப்புற—நகர்ப்புற உண்மை நிலவரங்களுக்கு ஏற்ற வகையில் பயன்தரத்தக்க பாடத் திட்ட முறை முதலிய செயற் குறிப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஒன்றிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தொடக்கக் கல்வியில் இடையில் நின்றுவிடுவோர், தேர்வில் தவறியோர், என்ற வகையில் சுமார் 60 சதவிகிதம் பிள்ளைகளும், எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கும் 60 சதவிகித மக்களும் ஐந்து ஆண்டுத் தொடக்கக் கல்விக்கு ஈடான கல்வி அறிவு பெற வகை செய்வது இந்தத் திட்டத்தில் ஒரு புதுமை அம்சமாகும். தொடக்கக் கல்வி நிலையில், இடையில் படிப்பை விட்ட மாணவர்கள், தொழில்களுக்குச் சென்றவர்கள், திரும்பவும் சேர்ந்து படிப்பதற்கு வகை செய்யப்படுகிறது. பள்ளிப் படிப்பு வகையிலும் சரி, கல்லூரிப் படிப்பிலும் சரி, பள்ளிக்கும் கல்லூரிக்கும் புறம்பாக வேலை செய்து கொண்டோ அல்லது தொழில் செய்து கொண்டோ தங்கள் விருப்பத்துக்கும், தேவைக்கும் ஏற்பக் கல்வி மேம்பாடு காண வழி செய்யப்படும்.

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், விவசாய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், புதிய முனைப்பான விஞ்ஞான ஆராய்ச்சி, தொழில் நுட்ப

விளையாட்டு வாயிலாக எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்படுகின்றன

மேம்பாடு வேலைத் திட்டம் குறித்தும், அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் கல்வி முறைகள் அனைத்திலும் கல்வி நிலைகள் அனைத்திலும் தமிழ் மரபு, தமிழ்ப் பண்பாடு ஆகியவைகளைப் பேணுவதிலும், தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுவதிலும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

கல்விக்காக அரசினரும் மக்களும் ஈடுபடுத்துகின்ற மிகப் பெரிய முதலீட்டுக்கு மிகுந்த அளவு பலன் கிடைக்கு மாறு செய்ய வேண்டும் என்று திட்ட அறிக்கை வலியுறுத்து கிறது.

கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் பற்றிய செயல் அணியின் தலைவர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள். மற்றும் செயல் அணியின் உறுப்பினர்கள் விவரம்:

திரு கே. திரவியம்,
டாக்டர் வி. சண்முகசுந்தரம்,
பேராசிரியர் எம். வி. மாதுர்,
செல்வி இ. மாத்யூஸ்,
டாக்டர் ஏ. ராமச்சந்திரன்,
பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன்,

திரு வி. டி. டைட்டஸ்,
திரு கே. வெங்கடேசன்,
திரு எஸ். வி. சிட்டிபாபு,
திரு பி. சிவலிங்கம்,
திரு கே. வெங்கடசுப்பிரமணியம் (உறுப்பினர்—செயலாளர்).

செயல் அணி 9 மாதக் காலம் பணியாற்றி அறிக்கையைத் தயாரித்தது.

செயல் அணியில் விஞ்ஞானம், தொழில் நுட்பப் பிரிவுத் தலைவர் : டாக்டர் ஏ. ராமச்சந்திரன் ;

பள்ளிக் கல்விப் பிரிவுத் தலைவர் : திரு எஸ். வி. சிட்டிபாபு;

உயர்தரக் கல்விப் பிரிவுத் தலைவர் : டாக்டர் வி. சண்முகசுந்தரம் ;

முதியோர் கல்விப் பிரிவுத் தலைவர் : பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன் ;

உள்மதிப்பீடு, செமெஸ்டர் முறைப் பிரிவுத் தலைவர் : திரு பி. சிவலிங்கம் ;

கல்வியின் குறிக்கோள்

தமிழகத்தில் கல்வி முறை, விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவற்றின் குறிக்கோள் பின்வருமாறு:—

குழந்தைகளின் அறிவாற்றலை வளர்ப்பது ;

நமது மாநிலம், நாடு, உலகம் இவைகளின் பண்பாடு, வரலாறு ஆகியவைகளை உணர்த்துவது ;

நாட்டின் அறநெறிகள் குறித்துப் போதனை ;

விஞ்ஞானம், தொழில் நுட்பம், தொழில் திறன்கள் எய்தச் செய்தல் ;

அறிவின் எல்லைகளை விரிவாக்கும் வண்ணம் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் ; நாடும், மாநிலமும் எதிர்நோக்குகின்ற தொழில் நுட்பப் பிரச்னைகளுக்கும் வளர்ச்சிப் பிரச்னைகளுக்கும் தீர்வு காணல் ;

வளர்ந்து வரும் கல்வித் தேவைகளை நிறைவு செய்தல் ; மாநில மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான ஏழை மக்களின் நிலையை உயர்த்தச் சமூக ஈடு செய் வசதிகள் ஆகியனவாகும்.

மாநிலத்தில் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவைகளைப் பயிலுவோர் எண்ணிக்கையில் அற்புதமான வளர்ச்சியைக் கண்டு வருகின்றோம். தொடக்கக் கல்வியில் (1-லிருந்து 8-ஆம் வகுப்பு வரை) மாணவர்கள் எண்ணிக்கை 1956—57-ல் 30.88 இலட்சமாக இருந்தது; 1971—72-ல் இது 65.77 இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 25,268 லிருந்து 32,021 ஆக அதிகரித்தது. 6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ள குழந்தைகளில், பள்ளிகளில் சேர்ந்தவர்கள் சதவிகிதம் 56.82-லிருந்து 94.5 என்ற அளவுக்கு உயர்ந்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை 88,331லிருந்து 1,65,658 ஆக அதிகரித்தது. 1971—72-ல் மட்டும் புதிதாக 2,000 ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது. 300-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்கள் அனைத்திலும் ஒரு மைல் சுற்றளவுக்குள் பள்ளிகள் உள்ளன.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி மட்டத்தில் (9-ஆம் வகுப்பிலிருந்து 11-ஆவது வகுப்பு வரை) 1956-57-ல் 2.4 இலட்சமாக இருந்த மாணவர்கள் எண்ணிக்கை 1971—72-ல் 7.14 இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்தது.

புதிய தலைமுறையினருக்குப் புதிய வசதி: குழந்தைகள் காப்பகம்



உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 894-லிருந்து 2,699 ஆகவும், ஆசிரியர்கள் எண்ணிக்கை 20,483 லிருந்து 59,891 ஆகவும் அதிகரித்தன. தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருப்பதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் எண்ணிக்கை 1960–61-ல் 147 ஆக இருந்த நிலை 1971–72-ல் 135 என்ற அளவுக்குக்குறைக்கப்பட்டது. முதியோர் கல்வி நிலையங்கள் 1960–61-ல் மொத்தம் 949 இருந்தன. 1971–72-ல் இவற்றின் எண்ணிக்கை 1,448 ஆக வளர்ச்சி பெற்றுள்ளது.

நூலக இயக்கம்

மாநிலத்தில் மொத்தம் உள்ள 14 மாவட்டங்களில் 13 மாவட்டங்கள் பொது நூலக முறையின் மூலம் பயனடைந்து வருகிறன்றன. 1948-ஆம் ஆண்டின் பொது நூலகச் சட்டத்தின் கீழ் மொத்தம் 3,340 நுலகங்கள் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டம் மட்டும் இந்தப் பணி அமைப்பின் கீழ் வரவில்லை. சொத்து வகையில் ரூபாய்க்கு 3 காசு வீதம் நூலக செஸ் விதித்தும்,சென்னை நகரம் தவிர்த்து மாநிலத்தின் மற்றப் பகுதிகளுக்கு ஈட்டு மானியம் அளித்தும் இதற்கான நிதிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. கன்னிமரா பொது நூலகம், தென்னிந்தியாவின் காபிரைட் நூலகம் என்ற முறையில் நாட்டில் வெளியிடப்படும் ஒவ்வொரு நூலிலும் ஒரு பிரதியைப் பெறுகின்றது. இந்த நூலகம் மாநிலத்தின் மைய நூலகமும் ஆகும். மாநிலத்தில் 13 மாவட்ட மத்திய நூலகங்களும் 1,437 கிளை நூலகங்களும் 1,883 நூல் வழங்கிடங்களும் 6 நடமாடும் நூலகங்களுமாக மொத்தம் 3,340 நூலகங்கள் உள்ளன. பள்ளிகளுக்கு வெளியே கல்வியைப் பரப்பும் பணிகளில் அரசு நிறுவனங்கள், சேவா மன்றங்கள், கூட்டுறவு அமைப்புகள், அற நிறுவனங்கள் போன்றவை ஈடுபட்டுள்ளன. நல்ல முறையில் இவை பணியாற்றி வருகின்றன. இப் பணிகள் விரிவடைந்தும் வருகின்றன.

இதே கால அளவில் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை 6.1 இலட்சத்திலிருந்து 12·1 இலட்சமாக் உயர்ந்துள்ளது.

தொழில் பயிற்சி நிறுவனங்கள் அவற்றில் பயிலும் மாணவர்களைப் பொறுத்த வரை 1961–62-ல் மாநிலத்தில் மொத்தம் இருந்த நிறுவனங்கள் 10 ; இவற்றில் 3,368 பேர் பயின்று வந்தனர். 1971–72-ல் நிறுவனங்கள் எண்ணிக்கை 31 ஆகவும், பயிலுவோர் தொகை 13,112 ஆகவும் உயர்ந்துள்ளது. 195 தொழிற்சாலைகள் மொத்தம் 2,727 பேர்களுக்கு ' அப்ரன்டிஸ் ' பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

மூன்றும் திட்டக் காலத்தில் 14 தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் 840 பேர் சேர்ந்து படிக்க வசதி உள்ளது. எவ்வித மாற்றமுமின்றி இப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பாலிடெக்னிக்குகள் எண்ணிக்கை 1956-ல் 9 ஆகவும் அவற்றில் பயிலுவோர் தொகை 820 ஆகவும் இருந்தது. 1971–72-ல் பாலிடெக்னிக்குகள் எண்ணிக்கை 35 ஆகவும் பயிலுவோர் தொகை 4,642 ஆகவும் உயர்ந்தது. இவை தவிர தோல் தொழில் நுட்பம், சமையல் கலை நுட்பம், ஊட்ட உணவு நுட்பங்கள் முதலியன பற்றிய 7 தனி நிறுவனங்கள் மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலவச மதிய உணவு — 31000 பள்ளிகளில் இப்பணி நடைபெறுகிறது

கல்லூரிகள் (கலை, விஞ்ஞானம்) எண்ணிக்கை 40-லிருந்து 169 ஆக வளர்ந்துள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள் தொகை 36,853 ஆகவும் 3,000 ஆகவும் இருந்த நிலையிலிருந்து முறையே 1·83 இலட்சமாகவும் 8,945 ஆகவும் உயர்ந்துள்ளது.

இதே கால அளவில் பல்கலைக் கழகங்கள் எண்ணிக்கை 2-லிருந்து 3 ஆக உயர்ந்தது. இது தவிர இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் (Indian Institute of Technology), தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், உயர்தரக் கல்விக்கான இரு நிறுவனங்கள் (Rural Institutes for Higher Education) மாநிலத்தில் பல்கலைக் கழக அந்தஸ்துடன்

இயங்கி வருகின்றன. 1950–61ல் மாநிலத்தில் 3 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் 300 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் திறனுடன் இருந்தன. 1970–71ல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் எண்ணிக்கை 23 ஆகவும் மாணவர்கள் எண்ணிக்கை 3,000 ஆகவும் உயர்ந்தது. 1950-ல் மாநிலத்தில் பொறியியல் கல்லூரிகள் 7 இருந்தன. இப்போது உள்ள பொறியியல் கல்லூரிகள் 12. இவற்றில் மாணவர்கள் எண்ணிக்கை 620 என்ற நிலையிலிருந்து 1,600 ஆக உயர்ந்துள்ளது. பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் புது ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. கிண்டி பொறியியல்கல்லூரியில்(Fundamental Research Establishment) அடிப்படை ஆராய்ச்சி அமைப்பும், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னலஜி ஆகியவைகளில் முனைப்பான ஆராய்ச்சிச் செயல் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தரம் உயர்த்தும் பணிகள்

மாநிலத்தில் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய அறிவியல்களின் தரத்தை உயர்த்தவும் சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடக்கக் கல்வியில் ஆசிரியர்-மாணவர் விகிதம் ஓராசிரியர் பள்ளிகளுக்கு 20 என்றும் இரண்டு ஆசிரியர்கள் உள்ள பள்ளிக்கு 30 என்றும் மற்றப் பள்ளிகள் விஷயத்தில் 55 என்றும் செயல்படுத்தப்படவில்லை என்றாலும், இந்த ஏற்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 400-க்கு மேல் பிள்ளைகள் உள்ள உயர்தொடக்கப்பள்ளிகளில் பயிற்சி பெற்ற பட்டதாரிகளைத் தலைமை ஆசிரியர்களாக அமர்த்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகளுக்கு விஞ்ஞான போதனைக் கருவிகள் மானியம், நூலக மானியம், ஆசிரியைகளுக்கு வீட்டு வசதி ஆகிய திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

1956–57ல் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் 8·88 இலட்சம் மாணவர்கள் பயனடைந்தனர். 1971–72ல் 1லிருந்து 8-ஆம் வகுப்பு வரை உள்ள சிறார் சிறுமியர் மட்டும் மொத்தம் 18 இலட்சம் பேர் பயனடையும் அளவுக்கு இப்பணி விரிவடைந்தது. மாநிலத்தில் 31,000 பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்க சாதனையாகும். தனியார் நன்கொடைகள் கொண்டு இலவசச் சீருடை வழங்கும் திட்டமும் உள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில், தொழில் முறைக் கல்விக்கு இடமளிக்கும் வகையில் 143 பள்ளிகளில் பொறியியல் வகுப்புகளும் 120 பள்ளிகளில் 'செக்ரடேரியல்' படிப்பும், 63 பள்ளிகளில் விவசாயப் படிப்பும் 26 பள்ளிகளில் மனை இயல் கலைப் படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன. நவீன விஞ்ஞான

பாடத் திட்டத்தைப் பயன்படுத்துவதற்காக 1-லிருந்து 11-வரையுள்ள வகுப்புகளுக்குப் பாடத் திட்டத் திருத்தம் குறித்து வல்லுநர் குழு ஆராய்ந்தது. 1-லிருந்து 5-ஆம் வகுப்பு வரை திருத்தப்பட்ட பாடத்திட்டத்திக்கு இறுதி வடிவம் அளிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் பணிநிலை, அந்தஸ்து ஆகியவைகளை உயர்த்துவதற்காக, ஊக்கமூட்டும் ஊதிய விகித உயர்வு, வருங்கால நல நிதி—இன்சூரன்ஸ் வசதி, செலெக்ஷன் கிரேடு பதவிகள், மற்றும் பண்டிகைகளுக்கு முன்பணம், திருமணக் கடன் வசதி, ஆசிரியர் விடுதிகள் முதலிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கலை, விஞ்ஞானக் கல்லூரி களின் பாடத் திட்டங்கள் திருத்தப்பட்டு நவீன மயமாக்கப் பட்டுள்ளன. இந்தத் திருத்தப்பட்ட பாடத் திட்டங்களில் ஆசிரியர்களுக்கு மறு பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

உயர்தரக் கல்விக்குத் தமிழ் பயிற்சி மொழி ஆக்கப்பட் டுள்ளது. இந்தச் சீர்திருத்தம் செயல் படுத்தப்படும் 46 அரசினர் கல்லூரிகளில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் பயிற்சி மொழிகளாக உள்ளன. இரண்டு மாநிலச் சம்பளக் குழுக் களின் பரிந்துரைகளின் தொடர்பாக, கல்லூரி ஆசிரியர்களின் அந்தஸ்தும் பணி நிலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன. அவற் றின் பரிந்துரைகளின்படி பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. நகர ஈட் டுப் படி, வீட்டு வாடகைப்படி, ஒய்வூதிய வசதி ஆகியவை களும் அளிக்கப்பட்டுள்ளன.

பொறியியல் கல்லூரிகளில், நேர்முக வேலைப் பயிற்சிக்கும் இடமளிக்கும் ‘ சாண்ட்விச் ’ வகுப்புகள், நவீன தொழில் நுட்ப முறைகளில் பாலிடெக்னிக் ஆசிரியர்களுக்குப் பயிற்சி ஆகியனவும் கல்வித் தர உயர்வுக்கு வழி கோலுகின்றன.

கல்விச் செலவு ரூ. 112 கோடி

தமிழ்நாட்டில் புகுமுகக் கல்வி வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. புகுமுக வகுப்பிலும் மாநில அரசின் செலவில் இலவசக் கல்வி அளிக்கப்படுகின்றது. இது தவிர, கலை, விஞ்ஞானக் கல்லூரிகளில் படிக்கும் 1.6 இலட்சம் மாணவர்களில் 70 சத விகிதம் பேர்களும் பொறியியல் நிறுவனங்களில் படிக்கும் 8,200 மாணவர்களும் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் உபகாரச் சம்பளம் பெறுகின்றனர். இதன் விளைவாகக் கல்விச் செலவுகள் அதிகரித்துக் கல்வித் துறைச் செலவு இன்றைய நிலையில் 89·85 கோடி ரூபாய் ஆகின்றது. சுகாதார மருத்துவக் கல்வி வகையில் ரூ. 12·94 கோடியும் வேளாண்மைக் கல்வி வகையில் ரூ. 0·54 கோடியும் அரிசனர் பிற்பட்ட வகுப்பினர் நலத்



இலவச மதிய உணவுத் திட்டத்தால் பயன் பெறும் சிறுவர் சிறுமியர் 18 இலட்சம் பேர்

துறையில் கல்விக்கு ரூ. 8·20 கோடியும், மீன்வளத் துறையில் மீன் வளம் சம்பந்தப்பட்ட கல்விக்கு ரூ. 10 இலட்சமும், தொழிலாளர் நலம், தொழில் பயிற்சித் துறைகளில் கல்விக்கு ரூ. 1 கோடியும் மாதர் நலத் துறையில் தொடக்கக் கல்விக்கு முற்பட்ட கல்விக்காக ரூ. 10 இலட்சமும் செலவிடப்படுகின்றன. இவ்வாறாக மாநிலத்தின் மொத்த வரவு-செலவு ரூ. 396 கோடியில், கல்விப் பணிக்காக மட்டும் ரூ. 112·73 கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது.

தொடக்கக் கல்வி அளிப்பதில் மாநில அரசின் செலவு ஒரு மாணவருக்கு ரூ. 61·70-ம், உயர்நிலைப் பள்ளிக்கல்வி அளிப்பதில் ஒரு மாணவருக்கு ரூ. 244.80ம் ஆகின்றது. கல்லூரிக் கல்வி அளிப்பதில், அரசினர் உதவி பெறும் கல்லூரிகளில் ஒரு மாணவருக்குச் செலவிடப்படுவது ரூ. 542 ஆகவும் அரசினர் கல்லூரி விஷயத்தில் ரூ. 480 ஆகவும் உள்ளது. தொழில் நுட்பக் கல்வி அளிப்பதில், அரசினர் நடத்தும் பாலிடெக்னிக்குகளில் ஒருவருக்குச் செலவு ரூ. 2,500 ஆகவும், தனியார் நிறுவனங்களினுல் செலவு ரூ. 3,160 ஆகவும் உள்ளது. பொறியியல் கல்வி விஷயத்தில் அரசினர் நிறுவனங்களில் ஒருவருக்கு ரூ. 8,600ம் தனியார் நிறுவனங்களில் ரூ. 8,530ம் ஆகின்றது.

கல்விக்காகச் செய்யப்படும் மற்றச் செலவினங்களை, இப்படி நபர் வாரியாகக் கணக்கிடுவது எளிதல்ல. அந்த ஆதார வசதிகளைக் குறிபிப்டுவது மூலம் செலவினத்தை ஒருவாறு மதிப்பிடலாம். அதன் விவரம் வருமாறு :

கல்வி நிதி வருவாய் வசதிகள்

	(ரூபாய் கோடியில்)
இந்திய அரசாங்கம்	3·50
பல்கலைக் கழக மானியக் குழு	5·00
பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்ட திட்டங்கள் ..	0·25
ஊராட்சி நிறுவனங்கள்	5·00
சேவா நிறுவனங்களால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள். ..	6·00
அங்கீகாரம் பெருத பள்ளிகள்	0·50
அங்கீகரிக்கப்பட்ட ஆனல் உதவி பெருத பள்ளிகள்	0·50
பெற்ரேர்	15·00
மொத்தம் ..	35·75

இவ்வாருக மாநிலத்தில் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவைகளுக்கு ரூ. 148·48 கோடி செலவிடப்படுகின்றது. மாநில மொத்த நிகர வருமானம் ரூ. 2,648·89 கோடியில் கல்விக்காக 5·61 சத விகிதம் செலவாகின்றது.

மாநிலத்தில் கல்வி நிருவாகம், 5 இயக்குநர்கள் பொறுப்பில் நடத்தப்படுகின்றது. பள்ளிக்கல்வி, கல்லூரிக்கல்வி, தொழில் நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, சட்டக் கல்வி ஆகியவைகளில் இயக்குநர்கள் பொறுப்பு வகிக்கிருர்கள்.

மாலை முழுதும் விளையாட்டு.....

விவசாயம், வனத்துறை, மீன் துறை, கால்நடை வளர்ப்புத் துறை, ஆகியவைகளில் கல்வியும் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகளும் தனி இயக்குநகரகங்கள் மூலம் நிருவகிக்கப் படுகின்றன.

செலவு 20 மடங்கு

மாநிலத்தில் கல்விச் செலவு கடந்த கால் நூற்றுண்டுக் காலத்தில் 20 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. இப்படி அளவு, தரம், சாதனே அனேத்திலும் மேம்பாடு இருந்தும் சில குறைபாடுகள் இருப்பதைக் குறித்துக் கொள்ள வேண்டியுள்ளது. 12 ஆண்டுத் தொலே நோக்குத் திட்டத்தில் வேலேத் திட்டங்களுக்கு முதலிட வரிசைக் கிரமம் தருவதில் இவைகளேக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய படிப்புகளில் இடையில் படிப்பை விட்டு நின்று விடுவோர், தேர்வு பெருமல் பழைய வகுப்பிலேயே தங்கிவிடுவோர் பிரச்னே குறிப்பிடத்தக்க ஒன்று. இதில் உதாரணத்துக்காக ஒரு அட்டவணே கீழே தரப்படுகின்றது.

1957–58ஆம் ஆண்டில் 1-வது வகுப்பில் மொத்தம் சேர்க்கப்பட்டவர்கள் 8·74 இலட்சம். இவ்வாறு சேர்ந்த இந்தத் தலேமுறையினர் கல்லூரி படிப்பை முடித்துப் பட்டம் பெற்றது 1972-ல். கல்வி வளர்ச்சிப் பாதையில் வளர்ச்சி எவ்வாறு சுருங்கியுள்ளது என்பதையும் இந்த அட்டவணே காட்டுகின்றது.

மாணவப் பருவ வளாச்சி 1957–72

ஆண்டு.	வகுப்பு.	சேர்க்கப் பட்ட மாணவர்கள் (இலட்சத்தில்)
1957–58	1	8·74
1961–62	5	4·22
1964–65	8	2·54
1967–68	11	1·66
1968 ஜூலே	புகுமுக வகுப்பு.	0·59
1968 ஜூலே ஆசிரியர் பயிற்சி, இதர எஸ்.எஸ்.எல்.சி-க்கு மேற்பட்ட வகுப்புகள்.		0·20
1972 ஜூலே பி.ஏ., பி.எஸ்சி., பி.காம், பட்டம் பெற்றவர்கள்.		0·24
மீண்டும் தேர்வு எழுதுவோர்.		+0·08

பெண் கல்வியைப் பொறுத்தவரை 1966—67ல் 1-வது வகுப்பில் சேர்க்கப்பட்டவர்கள் 5,85,665 பேர். 1970—71ல் அவர்களில் 5-ஆம் வகுப்பில் இருந்தவர்கள் 2,83,939 பேர். இதன் மூலம் 51·45 சத விகிதம் பேர் படிப்பை நடுவில் விட்டுவிட்டனர் என்பது தெரிகிறது.

தொடக்க வகுப்புகளில் சுமார் சரி பாதிப்பேர் படிப்பை நிறுத்திவிடுகிறுர்கள் என்ற நிலைமையினுல், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தொகை 60 சத விகிதம் கூடுகிறது என்ற நிலை ஏற்படுகின்றது. ஏழ்மை, வறுமை நிலையில் உள்ளவர்கள்தான் பெரும்பாலும் படிப்பை நடுவில் நிறுத்திவிடுகிறுர்கள் என்பதும் பதிவுகளிலிருந்து தெரிகின்றது. படிப்பை நடுவில் விட்டுவிடுகிறவர்களும், எழுதப்படிக்கத் தெரியாத ஏழைகளும் இரு தனிப்பிரிவினர் அல்லர். இவர்கள் ஒரே பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். எனவே, ஏழைகளின் குழந்தைகளுக்குக் கல்வி கிடைக்காமல் போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

படிப்பில் வகுப்புத் தேர்வுகளில் வெற்றி பெருததற்குக் காரணங்கள் பெரும்பாலும் கல்வி அறிவு சம்பந்தப்பட்ட காரணங்களே. ஆனுல் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிப்பை நடுவில் நிறுத்துவதற்கு முக்கியமான காரணம் பொருளாதார நிலையே ஆகும்.

தொடக்கப் பள்ளிகளில் முதல் 5 வகுப்புகளில் நடுவில் நின்றுவிடுவோர் 51·2 சதவிகிதம் ஆகும். புகுமுக வகுப்பினைக் கடக்கும் மட்டத்தில் 53 சத விகிதம் பேர் நின்றுவிடுகின்றனர். நிதிச் செலவு, தொழில் நுட்ப நபர்கள் என்ற கண்ணுேட்டத்தில் பார்க்கும்போது தொழில் கல்லூரிகளில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. பொறியியல் படிப்பில் 10 ஆண்டுக் கால அளவில் இப்படி நின்றுவிடுவோர் சுமார் 18 சத விகிதம். பாலிடெக்னிக் கல்வியில் இவ்வகையில் நின்றுவிடுவோர் 20 சதவிகிதம் ஆகும். இந்த விணடிப்பைத் தவிர்க்க தொழிற் கல்வியைத் திருத்தியமைத்தாக வேண்டியுள்ளது.

புகுமுக வகுப்பு மட்டத்தில் பலர் இடையில் நின்றுவிடுவதால் கல்வி வீணடிப்பு நிலைமை தனித்தன்மை வாய்ந்ததாகிறது. அந்தந்த மாணவர்கள், அரசினர், பெற்றேர் அனைவருமே இதனுல் இழப்புக்கு உள்ளாகிறுர்கள். புகுமுக வகுப்பு என்பது மாணவர்களுக்கும், சரி, பெற்றேர்களுக்கும் சரி, அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கு முற்பட்ட நடுவாந்திர (Baby Sitter) கட்டமாகவே இருக்கின்றது. வேலைக்குச் செல்லுவோர் விஷயத்தில் எஸ்.எஸ்.எல்.சி., முடித்தவர்களுக்கும் புகுமுக வகுப்பு படித்தவர்களுக்கும் இடையே அதிக வேறுபாடு ஏதுமில்லை. படிப்பைப்

ஒரு மாணவருக்கு ஆகும் கல்விச் செலவு

தமிழ்நாட்டில் கல்வி அளிப்பதில் நிலைவாரியாக ஒரு மாணவருக்கு ஆகும் செலவு, தற்போதைய நிலவரத்தின் பின்வருமாறு :—

	ரூ.
தொடக்கப் பள்ளி	61·70
உயர் தொடக்கப் பள்ளி	111·40
உயர்நிலைப் பள்ளி	244·80
உதவிபெறும் கலை, விஞ்ஞானக் கல்லூரி	542·00
அரசினர் கலை, விஞ்ஞானக் கல்லூரி	480·00
அரசினர் பாலிடெக்னிக்	2,500·00
தனியார் பாலிடெக்னிக்	3,160·00
அரசினர் பொறியியல் கல்லூரி	8,600·00
தனியார் பொறியியல் கல்லூரி	8,530·00
மருத்துவக் கல்லூரி	10,000·00
விவசாயக் கல்லூரி	7,000·00

ஒப்பு ஆய்வுக்காக வேறு ஒரு நாட்டில் நிலை வாரியாக ஒரு மாணவருக்கு ஆகும் செலவு கீழே தரப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டில் 1964-ல்.

	ரூ.
தொடக்கப் பள்ளி	722·50
உயர்நிலைப் பள்ளி	3,235·00
தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளி	3,383·75
பல்கலைக் கழகம்	3,827·50

பொறுத்த அளவில் இந்த ஓராண்டுக் காலம், போதிப்பவர்களுக்கும் சரி, கற்றுக் கொள்வோருக்கும் சரி, போதுமான கால அவகாசம் இல்லை. மேற்கொள்ளப்படும் சிரமத்துக்குப் போதுமான அளவு பலன் இதில் கிடைப்பதில்லை.

தற்போதையத் தேர்வு முறை

கல்வி நிறுவனங்களில் தற்போதையத் தேர்வுமுறை மாணவர்களின் பொது அறிவு, மதி நுட்பம், கற்கும் ஆற்றல் ஆகியவைகளை மதிப்பிடக் கூடிய முறையில் இல்லாமல் மனப் பாடம் செய்யும் சக்தியைச் சோதிக்கும் தேர்வு போலவே

இருக்கின்றது. மாணவர்களின் திறன், அறிவாற்றல் ஆகியவைகளைச் சோதிக்க ஏற்றதொரு வழிமுறை கண்டுபிடிக்கப்படுவது அவசியம்.

படித்த பட்டதாரிகள் வேலை கிடைக்காமல் இருக்கும் நிலையும், கல்வி வீணடிப்பில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. நாட்டில் 1970-ல் வேலையில்லாமல் இருந்தவர்கள் 18·22 இலட்சம். 1971-ல் இத்தொகை 22·96 இலட்சமாக உயர்ந்தது. இந்த 22·96 இலட்சம் பேர்களில் 12·97 இலட்சம் பேர் பள்ளிப் படிப்பை முடித்தவர்கள். 6 இலட்சம் பேர் கல்லூரியில் படித்த ஆனல் பட்டம் பெருத நபர்கள். 3·94 இலட்சம் பேர் மேல் பட்டப்படிப்புப் படித்தவர்கள். தமிழ் நாடு மாநிலத்தைப் பொறுத்த வரை 1971 டிசம்பரில் மெட்ரிகுலேஷன் தேறியோர், பட்டம் பெற்ருேர், மேல் பட்டம் பெற்ருேர் வகையில் மொத்தம் 1,92,865 பேர்கள் வேலை தேடி, பதிவு செய்து கொண்டுள்ளோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். வேலை இல்லாமல் இருந்த 2,381 இஞ்சினீயர்கள், தொழில் நுட்ப நபர்கள் வேலை வசதித் திட்டத்தின் கீழ் வேலை பெறுகின்றனர். 600 மருத்துவப் பட்டதாரிகள், தனித் திட்டத்தின் கீழ் வேலைக்கு வாய்ப்புப் பெறுகின்றனர்.

நமது பிரச்சினை இரு வகைப்பட்டது. நமது பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைவாகவும் வேலை வாய்ப்பு உயர்வு விகிதம் குறைவாகவும் இருக்கின்றது. ஆனல் சமூக மக்களோ, படித்தவர்களுக்கெல்லாம் நல்ல வேலை-அரசாங்க வேலை கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்ருர்கள். மாநிலத்தின் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்ப அறிவு ஆகியவைகளை வேலை வசதிக்கும், சுயவேலைத் தேவைகளுக்கும் ஏற்ப சரிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

மாநிலத்தில் நூலகங்களைப் பொறுத்தவரை, இதற்குரிய நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதிஅலுவலர்கள்-நிருவாகச் செலவு ஆகியவைகளுக்குப் போய்விடுகின்றது. அவ்வப்போது புது நூல்கள் வாங்கப் பெறுவதில்லை. புத்தகங்கள் வாங்குவதில் ஒரு முறையான ஏற்பாடு வகுக்கப்படவில்லை. புத்தக வியாபாரிகளிடையே போட்டியினுல் நிலைமை மேலும் மோசமாகிறது.

கல்வியும் வளர்ச்சிப் பணியும்

பணப் பெருக்க நிலைமையினுல் மாநிலத்தில் கல்விச்-செலவு அதிகரித்தபடி இருக்கிறது. சம்பளக் குழுக்களின் பரிந்துரைகளினுலும் மற்றக் காரணங்களாலும் ஆசிரியர்கள் சம்பளம், படிகள் உயர்த்தப்பட்டன. அப்படி இருந்தும்

பெண் கல்வியில் தமிழ்நாடு சிறப்பிடம் வகிக்கிறது

குறைகள் தொடர்ந்து சொல்லப்படும் நிலையும் கல்வித் தரம் தாழும் நிலையும் ஏற்பட்டன. மாநிலத்தில் கல்விக்காக அரசினர் செலவு 1961-ல் ரூபாய் 15 கோடியாக இருந்தது. 1972-ல் அது 39 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது ஆண்டுக்கு 45 சத விகிதம் இச் செலவு அதிகரித்து வந்துள்ளது. இதே கால அளவில் உள் நாட்டுப் பொருள்கள் மொத்த உற்பத்தி விகிதம் 3.5 சத விகிதம்தான் அதிகரித்துள்ளது. தொலை நோக்குத் திட்டக் காலத்தில் கல்விக்காக அரசு இந்த விகிதத்திலேயே செலவிட்டுக் கொண்டு செல்வதென்றால் வளர்ச்சித் திட்டங்கள் சங்கடத்திற்கு உள்ளாக நேரும்.

மாநிலத்தில் கல்வி வளர்ச்சிக்குத் திட்டவட்டமான குறிக்கோள்களையும் ஆண்டு வாரிச் செயல் திட்டங்களையும் வகுத்துக் கொள்வது அவசியமாகின்றது. எல்லா மாவட்டங்களிலும் இவ்வாறு திட்டமிட்டுக் கொள்வதற்குத் தற்போது அமைப்பு ஏதும் இல்லை.

தமிழகத்தில் கல்வி முறை, விஞ்ஞானம், தொழில் நுட்ப வளர்ச்சி தெம்பூட்டுவனவாக உள்ளன. மக்கள் அனைவருக்கும் கல்வி கிடைக்கும் வண்ணம் முன்னேற்றம் காண்பதற்கும், சமூகத்தின் பொருளாதாரம், பண்பாடு அற

நெறி ஆகியவைகளின் தேவைப்பாட்டுக்கும் ஏற்பக் கல்வி வளர்ச்சியை அமைத்துக் கொள்வதற்கு இவை ஒரு அடித் தளத்தை அமைத்துத் தந்துள்ளன. சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசுத் துறையினர், பல்கலைக் கழகங்கள், ஆசிரியர்கள் நிறுவனங்கள், மாணவர் சங்கத்தினர் ஆகியோருடன் ஆலோசனைகள் நடந்தன. இதன் விளைவாக ஒரு முக்கிய முடிவை அடைந்திருக்கிறோம். கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவை இதே வகையில் அதிகம் பெருக வேண்டும் என்று மக்கள் விரும்பவில்லை. இன்னும் மேலான பலன்கள் காணும் வகையில் மாற்றங்கள் தேவை என்று மக்கள் விரும்புகிறார்கள்.

கல்வியின் நோக்கம்

குழந்தைகளின் ஆற்றலை மேம்படுத்த வேண்டும் என்பது தான் தமிழகத்தின் தற்போதையக் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவற்றின் நோக்கமாகும். உலகம், நமது நாடு, நமது மாநிலம் இவைகளின் பண்பாடு, வரலாறு ஆகியவைகளை உணர்த்துவது, நாட்டின் அறநெறிகள் குறித்து அறிவு விளக்கம், விஞ்ஞானம் தொழில் நுட்பம், தொழில் திறன்கள் பெறுதல், அறிவின் எல்லைகளைமேலும் விரிவாக்கும் முறையில் ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பது, மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள தொழில் நுட்ப வளர்ச்சிப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது, எல்லோருக்கும் கல்வி வசதி கிடைக்கச் செய்வது, பெரும்பாலான ஏழை மக்களின் நிலைமைகளுக்கு ஏற்ப உதவிகள் அளிப்பது இந்தப் பணிகள் அனைத்தும் வரும் ஆண்டுகளில் தொடரும். இத்துடன், கல்வி வளர்ச்சிக்கான 12 ஆண்டுத் தொலை நோக்குத் திட்டத்தின் முக்கிய புதிய குறிக்கோள், நாடு முழுவதிலும் மாநிலத்திலும் வேலை வாய்ப்பு உரிமைக்கு ஏற்ற வகையில் கல்வி உரிமை சரிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் சமுதாயத்தின் தொழில் நுட்பப் படித்தரத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் கல்வி, தொழிற் பயிற்சி வளர்ச்சிக் கட்டங்களை, அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் நமது இலட்சியங்களாக இருந்து வரும்.

வருங்காலக் கல்வி முறை குறித்த கொள்கைகள் பின் வருமாறு :—

5-லிருந்து 14 வயது வரை அனைவருக்கும் முழுமையான இலவசக் கல்வி;

பெண்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்த்தல் ; நடுவில் படிப்பைக் கைவிடுவதைக் குறைத்தல் ;

எல்லா நிலைகளிலும் கல்வி, விஞ்ஞானம் இவற்றின் தரத்தை உயர்த்தல் ;

வேலை கருதிப் படிப்பை நடுவில் விட்டவர்கள் திரும்பச் சேர்ந்து படிக்க வசதி ;

சமூகத்தில் வசதிக் குறைவான பிரிவு மக்களுக்கு ஈடான கல்வி வசதி அளித்தல் ;

இந்தியா, தமிழகம் இவற்றின் இன்றைய நிலை, வருங் கால நிலை இவைகளுக்கு ஏற்ற வகையில் பயன்தரும் கல்வி, விஞ்ஞானப் படிப்புக்கு வழி வகை.

தற்போது கல்விக் கால அமைப்பு ஒரு வகையில் நீட்சி மிக்கதாகவும் ஒருவகையில் போதிய நீட்சி இல்லாததாகவும் இருக்கின்றது. பள்ளிப்படிப்பு 11 ஆண்டுகளாகவும், கல் லூரிப்படிப்பு 6 ஆண்டுகளாகவும் இருந்து வருகின்றது. தொடக்கக் கல்வியில் ஆண்டுக்கு 220 நாட்கள் வேலை நாட் கள். உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் 200 நாட்கள் வேலை நாட்கள். கல்லூரிக் கல்வியில் 180 நாட்கள் வேலை நாட்கள். இவை அனைத்திலும் வேலை நேரம் 5 மணி. இதில் மற்றொரு பிரச்சினை, பள்ளி மட்டத்தில் 1—5வகுப்புகள், 6—8 வகுப்பு கள், 9—11 வகுப்புகள் என்று மூன்று நிலைகள் உள்ளன. கல்லூரிப் படிப்பு வகுப்புகள் 1+3+2, என மூன்று நிலையாக இருந்து வருகின்றன. இந்த முறை மாணவர்களின் தேவைக்கோ, அல்லது சமுதாயத்தின் தொழில் நுட்பத் தேவைக்கோ ஏற்றதாக இல்லாமல் பெருமளவில் படிப்பை இடையில் விட்டுவிடும் நிலை இருக்கின்றது.

எனவே உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றம் பின்வருமாறு :

பாடத்திட்டம் கல்வித் தரம் இவை குறைவு படாத முறையில், மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பள்ளிப் படிப்புக் காலத்தை மற்ற மாநிலங்களில் உள்ளது போல 10 ஆண்டுகளாக ஆக்குதல்; போதிக்கும் நேரம், அலுவல் நாட்கள் ஆகியவைகளை ஏற்ற அளவில் நீட்டித்தல் ; பள்ளியில் 10 ஆண்டுப் படிப்பு அனைவருக்கும் இலவசக் கல்வியாக இருக்கும். வேலைக்கோ தொழிலுக்கோ மாணவர் கள் குறிப்பிட்ட நிலையில் செல்லும் வகையிலும் திரும்பவும் பள்ளியில் சேருவதற்கு வசதி தரும் முறையிலும் 10 ஆண்டுப் பள்ளிப்படிப்பு நான்கு அல்லது 5 நிலைகளாக ஆக்கிக் கொள்ளப்படும்.

நான்காம் வகுப்புக்குள்ளாகப் படிப்பை நிறுத்தி விடு வோரும், மாநிலத்திலுள்ள, எழுதப் படிக்கத் தெரியாத வயது வந்த நபர்கள் 143 இலட்சம் பேர்களும் 5 ஆண்டுத் தொடக்கக் கல்வி அளவுக்கு கல்வியைப் பெறும் வகையில் பள்ளிக்குப் புறம்பாகக் (Out of School Education) கல்வி வசதி அளித்தல்.

பள்ளிகளில் சிறுமிகள் எண்ணிக்கை சிறுவர் அளவுக்கு உயரும்படியாகப் பெண் கல்வியை ஊக்குவித்தல்.

தமிழகத்தின் பொருளாதாரம், சமூகம், பண்பாடு ஆகியவைகளில் உண்மை நிலைமைக்கு ஏற்ற வகையில் பாடத் திட்டம், போதனை முறை, கற்கும் முறை ஆகியவைகளைத் திருத்தியமைத்தல்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி, தொழில் சார்பு பெறும் வண்ணம், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் அதிக அளவில் ஏற்படுத்தல் ;

தகுதி, ஆர்வம் ஆகியவைகளுக்காகத் தேர்வு நடத்தி அந்த அடிப்படையில் உயர்தரக் கல்விக்கு மாணவர்களைச் சேர்த்தல்.

உயர்தரக் கல்விக்குக் கால அளவினை 2+2+2 அல்லது 3 ஆண்டுகள் ஆக்கல் ; இன்டர்மீடியட்டுக்கு 2 ஆண்டுகள் ; பட்டப்படிப்புக்கு 2 ஆண்டுகள். மேல்பட்டப் படிப்புக்கு 2 ஆண்டுகள் அல்லது 3 ஆண்டுகள். ஹானர்ஸ் பட்டப்படிப்பு. மருத்துவம், வேளாண்மை, பொறியியல் ஆகியவைகளில் பட்டப்படிப்பு தற்போதுள்ள கால அளவுப்படியே நீடிக்கும்.

மாநிலத்தில் பட்டப்படிப்புக்குக் கீழ்ப்பட்ட கல்லூரிப் படிப்பு முழுவதையும், சட்ட பூர்வமாக அமைக்கப்படும் புதிய அமைப்பிடம் விடுதல் (Statutorily constituted antonomous State council of Academic Awards).

சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களை பட்டமேல் படிப்பு ஆராய்ச்சி ஆகியவைகளுக்கான உயர்தனி நிலையங்களாக (Centres of Excellence) ஆக்கல்.

பொறியியலில் சான்றிதழ்ப் படிப்பு (டிப்ளமா), பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு ஆகியவைகளுக்காகத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று தொடங்கல் ; தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தை, இப்போதுள்ள துறைகளுடன் விலங்கியல், விஞ்ஞானம், விவசாயப், பொறியியல், மனை இயல் கலை, வனத்துறைக் கல்வி, மீன் வளம் ஆகிய படிப்புகளையும் சேர்த்துப் பல்துறைக் கல்வி நிறுவனமாக ஆக்குதல்.

கீழ்க்கண்ட அமைப்புகள் மூலம் விஞ்ஞான, வளர்ச்சித் துறை ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் :

1. தமிழ்நாடு விஞ்ஞான பவுண்டேஷன்

2. தமிழ்நாடு அடிப்படை விஞ்ஞானக் கழகம். (Academy of Basic Applied sciences)

3. விஞ்ஞானத் தொழில் கூடம்.
4. தகவல் சேகரிப்பு நிலையம்.
5. கம்ப்யூட்டர் நிலையங்கள்.
6. கடலியல் பொறியியல் கலன் விஞ்ஞான நிலையம்.
7. நிருவாகப் பயிற்சி நிறுவனம்.
8. பொருள் பரிசோதனை அமைப்பு.
9. மோட்டார் பொறியியல் நிலையம்.
10. நகர்புறத் தேவைப் பொறியியல் நிலையம்.

கல்வி குறித்துத் திட்டமிடுவதற்கான அமைப்பை ஏற்படுத்த வேண்டும். நிருவாகத்தைத் திருத்தியமைத்து, அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். தக்க பயிற்சித் திட்டங்களை மேற்கொள்வதும் அவசியம்.

தற்போதுள்ள பள்ளிக் கல்வி முறை, 11 ஆண்டு பள்ளிக் கல்வி இருக்கும் முறை, 1973-74 வரை நீடிக்கும் என்று கருதப்படுகிறது. 1974-75-லிருந்து தொடங்கும் புதியமுறை பள்ளிக் கல்வி 10 ஆண்டு என்ற நிலை உள்ளதாகும். அதாவது தொடக்கக் கல்வி 4 ஆண்டுகள்; நடுத்தரக் கல்வி 3 ஆண்டுகள்; உயர்நிலைப் பள்ளிக் கல்வி 3 ஆண்டுகள்.

தற்சமயம் தொடக்கக் கல்வியில் மொத்தம் 94.6 சதவிகிதம் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுகிறார்கள். 1973-74-க்குள் இதை 97 சத விகிதத்துக்கும் 1974-75-ல் இதை 100 சதவிகிதத்துக்கும் உயர்த்துவது அவசியம்.



மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஒரு தோற்றம்

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரை தற்போது சேர்க்கப் பெறுவோர் 35.7 சத விகிதமாக இருப்பதை 1983-84-ல் 75 சதவிகிதமாக உயர்த்த வேண்டும். 1974-75-ல் அமலுக்கு வரும் பத்தாண்டு பள்ளிப் படிப்பு முறையில், அந்த ஆண்டில் 100 சதவிகித குழந்தைகளும் தொடக்கப் பள்ளிகளில் சேருவர். 78.40 சதவிகிதம் பேர் நடு நிலைப் பள்ளிகளிலும் 48.09 சதவிகிதம் உயர்நிலைப் பள்ளிகளிலும் சேருவர்.

தற்போதுள்ள உயர்நிலைப் பள்ளிக் கல்வி முறையை, மூன்று வகையில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதாவது பல்நோக்கு உயர்நிலைப் பள்ளிகள் (Diversified High Schools) விரிவினை (Comprehensive High Schools) உயர்நிலைப் பள்ளிகள், தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் (Technical High Schools) என்பனவே அந்த மூன்று வகை ஆகும். 1974-75-க்குள் மொத்தம் 23 வளர்ச்சி மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு விரிவினை உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. படிப்படியாக இத்தொகை அதிகரிக்கப்படும்.

மாநிலத்தில் தற்சமயம் 14 தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆறுவது திட்ட முடிவில் இதனை 150 ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவினை உயர் நிலைப் பள்ளியாகவோ, தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளியாகவோ இல்லாத மற்ற உயர்நிலைப் பள்ளிகளின் பாடத் திட்டம், பல்நோக்குப் பாடத் திட்டமாக (Curriculum diversified) இருந்துவரும்.

1984-க்குள் மாநிலத்தில் கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் படிப்படியான முறையில் நல்ல முறையான நூலகப் பணியை ஏற்படுத்திக் கொள்ள கீழ்க் கண்ட யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தொகை அடர்த்தி நிலை தற்சமயம் சதுர கிலோ மீட்டருக்கு 20 என்று இருப்பது 1980-ல் 39 என்ற அளவுக்கு உயர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனை யொட்டி நூலகத் தேவை அதிகரிப்பதற்கேற்ப நூலகப் பணி விரிவு பெற வேண்டும். நூலகர்கள், ஒரு நூலகப் பணியிலிருந்து மற்ற நூலகங்களுக்கு எளிதில் மாறும் வண்ணம், இப்பணி நெகிழ்வுத் தன்மையுடையதாக்கப்பட வேண்டும். தமிழகத்தின் வளர்ச்சித் தேவைகளுக்கு ஈடு செய்யும் முறையில் நூலகங்கள் இருத்தல் வேண்டும். நூலகங்களுக்குத் தனி இயக்கம் ஏற்படுத்தல்; நூலகர்களுக்காகத் தமிழ்நாடு நூலக சேவை என்ற தனிப் பணிப் பிரிவு, நூலக செஸ் விதிப்பைப் படிப்படியாக 10 காசாக உயர்த்தல் ஆகிய யோசனைகள் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கல்வித் தர மேம்பாடு

கல்விச் சாதனைகளில் நிறைவு, பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல், விஞ்ஞானத்தை நவீனமயமாக்கல், தேர்வு முறையில் சீர்திருத்தம், ஆசிரியர் கல்வி மேம்பாடு, பள்ளிக்குப் புறம்பே கல்வி வளர்ச்சி, பயிற்சி ஆகியவை கல்வித்தர மேம்பாட்டுக்குரிய வழி துறைகளாகக் குறிக்கப் பட்டுள்ளன.

செயல் முறை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளச் சட்ட பூர்வமான, சுய நிருவாகம் உள்ள மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் அமைக்கப்படும். பள்ளிக் கல்வி, பள்ளிக்குப் புறம்பான கல்வி இவற்றின் தரத்தைத் தொடர்ந்து மேம்படுத்தும் பொறுப்பினை இது வகிக்கும். இதன் முக்கிய வேலைத் திட்டங்கள் பின்வருமாறு :

சிந்தனை, சோதனை, புதுமை ஆர்வம் ஆகியவைகளை ஊக்குவிக்கும் முறையில் பள்ளிப் பாடத் திட்டத்தை அவ்வப்போது புதுப்பித்தல் ;

உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானப் படிப்பைச் சோதனைக்கூடச் சார்புள்ளதாக்குதல் ;

தனிப்பட்ட மாணவர் வளர்ச்சி நிலையைக் கணிக்கும் முறையில் தேர்வு முறையில் சீர்திருத்தம் ;

ஆசிரியர் கல்வி மேம்பாடு குறித்துத் தொடர்ந்து ஆராய்ச்சி ; ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவைகளை மேலும் மேம்படுத்தல் ; கல்வி போதிப்பதில் வானொலி, டெலிவிஷன் ஆகியவற்றைப் பயன்படுத்தல்.

நூலகம் 186037

உயர்தரக் கல்வி

அறிவு வளர்ச்சிக்கு உதவக்கூடிய முறையில் அதேநேரத்தில் பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்குத் துணைபுரியக் கூடியவகையில், தேர்ந்த தொழில் நுட்ப நிபுணர்களுக்குப் பயிற்சி தரும் முறையில் மாநிலத்தில் உயர்தரக் கல்வியின் குறிக்கோள் இருந்து வரும். நாட்டின் பொருளாதாரத் துக்குத் தேவைப்படும் அளவில் பட்டப்படிப்புக்குக் கீழ்ப் பட்ட தொழில் நுட்பக் கல்வியும் அதில் இடம் பெறும். பண்பாட்டைப் பேணுவதிலும், உயர்தரக் கல்விக்குப்பங்கு இருக்கும். சமூக மரபுகளுக்கு உட்பட்ட முறையில் சமயச் சார்பற்ற பண்பாட்டை வளர்க்கவும் இக்கல்வி உதவும்

உயர்தரக் கல்வி வகையில் மாநிலத்தில் எந்த அளவுக்கு இக்கல்விக்கு வகை செய்வது என்பதில் தொழில் நுட்ப வல்லுநர்கள் தேவைப்பாடு, ஓரளவு தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் தேவை ஆகியனவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் ஆகும். தொலை நோக்குத் திட்டக் காலத்தில் இந்தத் தேவைப்பாடு அளவு என்ன என்பதைக் கல்வித் திட்டச் செயற்குழு (education planning cell) பின்னர் மாநில ஆள்பல வாரியத்துடன் கலந்து முடிவு செய்யும்.

பி.ஏ., பி.எஸ்ஸி., படிப்பைப் பொறுத்தவரை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப, இந்தப் பட்டதாரிகளின் எண்ணிக்கை உயர்ந்துவரும். தொலை நோக்குத் திட்ட காலத்தில் இவர்கள் தேவைப்பாடு என்ன என்பதைக் கணித்துக் கொள்ள வேண்டும். இதில் விரிவாகக் கணக்கிடுவதற்கிடையில், பட்டதாரிகள், தொழில் நுட்பப் பட்டதாரிகள் தேவை குறித்துத்தற்காலிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை—ஆசிரிய மாணவர்கள்

கல்வித் தகுதி.	1972–74	5-வது திட்டம்.	6-வது திட்டம்.
1 பி.ஏ., பி.எஸ்ஸி., பட்டதாரிகள்-அலுவலகம், வாணிபம், தொழில், வேளாண்மை ஆகியவற்றில் வேலைகளுக்கு	20,000	75,000	1,00,000
2 எம்.ஏ., எம்.எஸ்ஸி., பி.எச்டி., பட்டதாரிகள்-கல்வி, விஞ்ஞான நிருவாகப் பதவிகளுக்கு	2,000	10,000	15,000
3 ஆசிரியர்கள், (ஐ.டி.ஐ., மற்றும் தொழில் நுட்பப்பள்ளிகள்)	1,000	6,000	6,000
4 பாலிடெக்னிக்குகள் ..	4,500	20,000	25,000
5 பொறியாளர்கள் ..	2,000	10,000	15,000
6 மருத்துவர்கள் ..	1,200	7,000	10,000
7 வேளாண்மைப் பட்டதாரிகள்	1,000	5,000	6,000

பி.ஏ., பி.எஸ்ஸி., பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு நிலவரங்களை, 5-வது 6-வது திட்டங்களில் இன்னும் நல்ல முறையில் அனுமானிக்க இயலும். அந்த வாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில் பி.ஏ., பி.எஸ்ஸி. படிப்புக்கு மாணவர்கள் சேர்ப்பதைச் சரிப்படுத்திக் கொள்வது அவசியமாகலாம்.

கலை, விஞ்ஞானக் கல்லூரிகளின் அதிகப் பட்ச அளவை வரைப்படுத்துவது அவசியமாகலாம். அதே நேரத்தில் இந்தக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் உள்ள கட்டட வசதிகள், கருவி சாதனங்கள், ஆசிரியர்கள், இதர அலுவலர்கள் ஆகியோரை அதிகப் பட்ச அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த வசதிகள் தற்சமயம் நாள் ஒன்றுக்கு 5 அல்லது 6 மணி நேரமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றை முழு அளவில் பயன்படுத்துவது என்னும்போது இரண்டாவது ஷிஃப்ட், மாலைக் கல்லூரிகள், கடிதத் தொடர்பு மூலமான படிப்பு ஆகியவைகளுக்கு இடமேற்படும். பெண்களுக்கான உயர்தரக் கல்வி குறித்துப் புதிய கண்ணோட்டம் தேவைப் படுகிறது. அவர்களுக்காகத் தனி உயர்தரக் கல்வி நிறுவனங்கள் தேவையா என்பது போன்ற பிரச்சினைகள் கவனத்துக் குரியவை.

உயர்தரக் கல்வி நிறுவனங்களில் எல்லா மாணவர்கள் விஷயத்திலும், கல்வி வளர்ச்சி நிலையையும் பொருளாதாரத் தேவையையும் ஒன்று சேர்க்க தேசிய அளவில் அல்லது மாநில அளவில் ஒரு பணி அமைப்பு ஏற்பட வேண்டும். நாடும் மாநிலமும் ஏற்றுக் கொண்டுள்ள சமயச் சார்பற்ற சமுதாய அமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் உயர்தரக் கல்வி நிறுவன அமைப்பும் நிருவாகமும் இருக்க வேண்டும். உயர்தரக் கல்வி நிறுவனங்கள் மூலமாக வரும் சமூக நிலை பற்றிய உணர்வும் கவனிக்கப் பெறல் வேண்டும். அறிவு ஒளியை ஏற்றி வைக்கின்ற கட்டம் இது. அடுத்து ஒவ்வொரு தலைமுறையையும் சேர்ந்த மாணவர்கள் இந்த அறிவு விளக்கை ஏந்தி முன்னேக்கிச் செல்லுவார்கள். இந்த ஒளி, உயர்தரக் கல்வியின் குறிக்கோளை அடையும் வகையில் அக இருளை ஒழித்து அறிவு ஒளியைப் பரப்பி வரும்.

பட்டப்படிப்பு, பட்டப் படிப்புக்குக் கீழ் உள்ள கல்லூரிப் படிப்புக் காலம் திருத்தியமைக்கப்படும். இண்டர்மீடியட் 2 ஆண்டுகளும், பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். படிப்புகள் தொடர்ந்து இரண்டு ஆண்டுக்காலப் படிப்பாகவும் சுய நிருவாகமுள்ள கல்லூரிகளில் (antonomous Colleges) இருந்து வரும்.

தமிழ்நாடு திட்டத்தின் கீழ்ச் சென்னைத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், கீழ்க்கண்ட 11 நிறுவனங்களையும் 36 பாலிடெக்னிக்குக்களையும் கொண்டு அமைக்கப்படும்.

1 கிண்டி, பொறியியல் கல்லூரி ;

2 ஏ.சி. தொழில் நுட்பக் கல்லூரி, சென்னை;

3 அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் ;

4 அரசினர் பொறியியல் கல்லூரி, சேலம் ;

5 அழகப்பா பொறியியல், தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடி;

6 பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்;

7 கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் ;

8 தியாகராஜா பொறியியல் கல்லூரி, மதுரை ;

9 பிராந்தியப் பொறியியல் கல்லூரி, திருச்சி ;

10 சென்னைத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், சென்னை ;

11 பொறியியல் கல்லூரி, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

இவை தவிர, பாலிடெக்னிக் பள்ளிகளுக்கும் இப்பல்கலைக் கழகம் பொறுப்பு வகிக்கும். இந்தப் பல்கலைக் கழகத்தின் மையம், கிண்டி பொறியியல் கல்லூரியில் இருந்துவரும்.

சுய நிருவாகமுள்ள கல்லூரிகளும், இணைப்புக் கல்லூரிகளும் இதில் சேர்ந்து இருக்கும். மாநிலத்தின் பொறியியல் வல்லுநர்கள் தேவையை மதிப்பிடுவது, உயர்தர ஆராய்ச்சிப் படிப்புகளுக்கும் உயர்தனிப் படிப்புக்களுக்கும் ஏற்பாடு செய்வது, பாடதிட்டம், போதனைக் கருவிகள் ஆகியவைகளை மேம்படுத்துவது, பொறியியல் தொழில் தரத்தை மேம்படுத்துவது ஆகியன இப்பல்கலைக் கழகத்தின் பணிகளாக இருந்துவரும். பொறியியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம், நிருவாக இயல் முதலிய துறைகள் இதில் இருக்கும்.

காலத் தேவைக்கு ஏற்ற வகையில் 36 பாலிடெக்னிக்குகளிலும் மாறுதல்கள் செய்யப்படும். நிருவாகம், சிவில் இஞ்சினீரிங், கட்டடங்கள், மின்சாரம், உணவு, மோட்டார்த் தொழில் நுட்பம் ஆகியவைகளில் புதிய படிப்புகள் தொடங்கப்படும்.

தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம்

தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், தற்போதுள்ள இரண்டு விவசாயக் கல்லூரிகளுடனும் 5 ஆராய்ச்சி நிலையங்களுடனும் தொடர்ந்து படிப்பு, ஆராய்ச்சி, விரிவினைப் பணிகளில் ஈடுபட்டுவரும். அண்ணுமலைப் பல்கலைக் கழக விவசாயக் கல்லூரி, புதிய பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாக அமையும். டிரிமெஸ்டர், உள் மதிப்பீடு முறைகள் மூலம், கற்பிக்கும் முறை சீரமைக்கப்படும். ஆராய்ச்சிப் பணிகள், நேரடியான களப்பணி சார்பு கொண்டதாக ஆகிவரும். தொலை நோக்குத் திட்டக் காலத்தில் விவசாயப் பொறியியல் கல்லூரி, மீன் கல்லூரி, மனையியல் கலைக்கல்லூரி, விலங்கியல் விஞ்ஞானக் கல்லூரி, மற்ருெரு விவசாயக் கல்லூரி ஆகியன தொடங்கப்படும். விவசாயக் கல்வியில் புதிய துறைகள் ஆரம்பிக்கப்படும். இந்தப் பல்கலைக் கழகத்துக்கு ஆகக்கூடிய செலவு :



ஆசிரியைகளுக்கு வசதி வாய்ந்த இல்லங்கள்

ஆண்டு.	முதலீடு.	நடைமுறைச் செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1972—73	10	30
1973—74	10	30
5-ம் திட்ட காலம் ..	200	250
6-ம் திட்ட காலம் ..	200	300

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம்

தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு குறித்த ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும், மற்ற மொழிகளுடன் தொடர்பை ஆய்ந்து வளர்க்கும் வகையிலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (International Institute for Tamil Studies) மேலும் வலுப்படுத்தப்பட்டு விரிவாக்கப்படும். இந்நாட்டு, அயல் நாட்டுத் தமிழ் மொழி அறிஞர்கள், பயிற்சி பெறத்தக்கவகையில் நிறைவுடையதாக இது அமையும். நன்கமைந்த தொகுப்புப் பணி, நூலகப் பணி ஆகியவற்றுடன், இந்த நிலையம் நான்கு ஆராய்ச்சித்

துறைகளைத் தொடங்கும். பயிற்சித் திட்டங்களையும் மேற்கொள்ளும். தமிழ் ஆராய்ச்சி பற்றிய இதழ் ஒன்றையும் இந்நிலையம் வெளியிடும். இப்பணிகளுக்கு மொத்தச் செலவு :

ஆண்டு.	முதலீடு.	நடைமுறைச் செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்).	
1972–73	..	..
1973–74	25	10
5-ம் திட்டம்	10	55
6-ம் திட்டம்	10	60

விஞ்ஞான தொழில்- நுட்ப ஆராய்ச்சி

தமிழகத்தில் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சிக்குத் திட்டமிடும் நேரத்தில் ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு நில வளம், கனிவளம், எரி பொருள், வசதி முதலியன குறைவு என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மக்கள் தொகை அடர்த்தி நிலை, அனைத்திந்திய சராசரி போல இரு மடங்கு இங்கு இருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் மக்களிடையே எழுத்தறிவு, பொதுக்கல்வி நிலை ஆகியவற்றிலும் தொழில் நுட்ப நபர்களைத் தருவதிலும் ஏனைய மாநிலங்களை விடத் தமிழகம் மேம்பட்டதாக இருக்கின்றது. இங்கு மக்கள் நல்ல ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்பவர்கள், கைத்திறன் நேர்த்தி, அறிவாற்றல் இவைகளுக்குப் பெயர் பெற்றது இந்த மாநிலம். இதன் ஆள்பலம், பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய முறையில் உள்ளது.

அண்மைக் காலத்தில் விஞ்ஞானமும் தொழில் நுட்ப அறிவும் பல பழைய கருத்துக்களைத் தகர்த்துள்ளன. இயற்கை வளங்கள் என்பவை அருகிலே இல்லாவிட்டாலும் கூட, பொருளாதாரச் செழுமை காண முடியும் என்ற நிலை இன்று அரும்பியிருக்கிறது. அறிவுத் திறனும் படைப்பாற்றலும் செல்வச் செழுமையைப் பெருக்க முடியும் என்ற நிலை வந்துள்ளது.

கல்வி, ஆராய்ச்சி, செயல் முறை ஆகியவைகளில் உலகில் பிற பகுதிகளுடன் ஒப்பிட்டு, நமது நிலையில் முன்னேற்றம் காண ஏற்ற நிறுவனங்களை அரசு அமைத்து அவற்றைப் பேணி வருவது அவசியம். இந்த நிறுவனங்கள் அரசுக்கு ஏற்ற யோசனைகள் கூறும்; ஆய்வுக்கூட விரிவினைகளுக்கான திட்டங்களுக்கு—சம்பந்தப்பட்ட ஆய்வுப் பணிகளில் உதவி செய்யும்.

தமிழ்நாடு விஞ்ஞான நிறுவனம்

சுய நிருவாக அமைப்பாகத் தமிழ்நாடு விஞ்ஞான நிறுவனம் (Tamilnadu Science Foundation) ஏற்படுத்தப்படும். ஆண்டு வாரி மொத்த மானியம் இதற்குத் தரப்படும்.

இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட விஞ்ஞானச் செயல் திட்டங்கள், ஆய்வுகள் ஆகியவைகளுக்கு இதன் மூலம் உதவி அளிக்கப்படும். செயல் திட்ட அடிப்படையில், ஏற்கனவே உள்ள நிறுவனங்களுக்கு இது உதவும். மாநிலத்தின் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை இது பரிசீலித்து வரும்.

இந்த நிறுவனத்தில் 7 பிரிவுகள் இருக்கும். அவை : (1) கணிதம், பௌதிக விஞ்ஞானம். (2) பொறியியல் விஞ்ஞானம். (3) உயிரியல் விஞ்ஞானம். (4) ஒழுங்கு முறைத் திட்டங்கள். (5) இயற்கை வளங்கள், ஆள் பல வளங்கள். (6) சமூக விஞ்ஞானம். (7) தொகுப்புப் பணி.

இந்தப் பணிக்கு 1973—74-ல் முதலீட்டுச் செலவு ரூ. 5 இலட்சமும் நடைமுதல் செலவு ரூ. 2 இலட்சமும் ஆகும். ஐந்தாம் திட்டக் காலத்தில் ரூ. 500 இலட்சமும் 6-வது திட்ட காலத்தில் ரூ. 655 இலட்சமும் நடைமுதல் செலவு ஆகும்.

தமிழ்நாடு அடிப்படை விஞ்ஞான, செயல்முறை விஞ்ஞானக் கழகம் (Tamilnadu Academy of Basic and Applied Sciences) மாநில அரசால் அமைக்கப்படும். விஞ்ஞானம், தொழில் நுட்ப விஷயங்களில் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு இது ஆலோசனை கூறும் அமைப்பாகச் செயல்படும். பல்வேறு நிறுவனங்களின் பணியை ஒருமுகப்படுத்தல், இதழ்கள், நூல்கள் முதலியன வெளியிடல் இதன் பணிகளாக இருந்து வரும். மாநிலத்தில் விவசாயம், கால்நடை மருத்துவம், மருத்துவம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளின் முன்னேற்றத்தை இது கவனித்து வரும்.

இக் கழகத்தில் உறுப்பினர்கள்—கௌரவ உறுப்பினர்கள் 400 பேர்கள் இருப்பார்கள். தொடங்கப் பெறுவதற்கு முன்பு 100 ஸ்தாபக உறுப்பினர்களும் 25 கௌரவ உறுப்பினர்களும் நியமிக்கப்படுவார்கள். தமிழக விஞ்ஞானிகளிடையேயிருந்து ஆண்டுதோறும் 25 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இத்திட்டத்துக்கு 1973–74-ல் முதலீட்டுச் செலவு ரூ. 5 இலட்சமும், நடைமுதல் செலவு ரூ. 2 இலட்சமும் ஆகும். 5-வது திட்டக் காலத்தில் நடைமுதல் செலவு ரூ. 10 இலட்சமும், 6-வது திட்டக் காலத்தில் ரூ. 10.50 இலட்சமும் ஆகும்.

தமிழ்நாடு விஞ்ஞானத் தொழில் கூடம்

சென்னை நகரில் பொருத்தமான இடத்தில் தமிழ்நாடு விஞ்ஞானத் தொழிற் கூடம் (Hall of Science and Industry in Tamil Nadu) அமைக்கப்படும்.

தேசிய மாணவர் படைப் பயிற்சியில் பங்குபெறும் மாணவியரின் அணிவகுப்பு

தொழில் வளர்ச்சிக்கும் மக்கள் நலத்துக்கும் விஞ்ஞானம் பயன்படும் முறையையும், இப் பணியின் வளர்ச்சி நிலையையும் இது எடுத்துக் காட்டும். நகரப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் மாணவரிடையேயும், பொதுமக்களிடையேயும் விஞ்ஞான, தொழில் நுட்பக் கருத்துக்களை இது பரப்பும். இதில் குழந்தைகள் கூடம் ஒன்றும் இருக்கும். விஞ்ஞான

விரிவுரைகள், திரைப்படக் காட்சிகள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்யும்.

கம்ப்யூட்டர் நிலையங்கள்

கிண்டி பொறியியல் கல்லூரியில் கம்ப்யூட்டர் வசதிகள் விரிவாக்கப்பட்டு, ஐந்தாம் திட்டக் காலத்தில் கோவையில் கம்ப்யூட்டர் நிலையம் அமைக்கப்படும். மதுரை, திருச்சி ஆகியவைகளில் இத்தகைய நிலையங்கள் தொடங்கும் சாத்தியக் கூறு குறித்துப் பின்னர் பரிசீலிக்கப்படும்.

எம். எஸ்ஸி. படிப்புக்கும், பொறியியல் பட்டப் படிப்புப் படிப்போருக்கும் கம்ப்யூட்டர் விஞ்ஞான வசதிகளைச் சென்னை நிலையமும் கோவை நிலையமும் அளிக்கும். பயிற்சி அளிக்கும் திட்டங்களையும் இது மேற்கொள்ளும்.

1973–74-ல் இத்திட்டத்திற்கு முதலீட்டுச் செலவு ரூ. 4 இலட்சமும் நடை முதல் செலவு ரூ. 50,000-மும் ஆகும். 5-வது திட்டக் காலத்தில் முதலீட்டுச் செலவு ரூ. 60 இலட்சமும் 6-வது திட்டக் காலத்தில் முதலீட்டுச் செலவு ரூ. 60 இலட்சமும் ஆகும்.

கடல் கலன் பொறியியல் விஞ்ஞானம்.

கலன் விஞ்ஞானம், கடலியல், பொறியியல், கடல் நீரின் கீழ் ஆய்வுப் பணிகள் முதலியவற்றிற்காக கடல் பொறியியல் கலன் விஞ்ஞான நிலையம் (Centre of ocean Engineering and Marine Sciences) ஒன்று அமைக்கப்படும். தமிழகக் கடலோரப் பகுதிகளையும் மறைந்துள்ள வளங்களையும் பயன்படுத்திக்கொள்வதில் இந்த நிலையம் முக்கியக் கருவியாக விளங்கும். 1973–74-ல் இத் திட்டத்துக்கு ரூ. 9 இலட்சம் முதலீட்டுச் செலவும் ரூ. 2 இலட்சம் நடைமுறைச் செலவும் ஐந்தாம் திட்டக் காலத்தில் ரூ. 9 இலட்சம் முதலீட்டுச் செலவும் ரூ. 25 இலட்சம் நடைமுறைச் செலவும் ஆகும். ஆறுவது திட்டக் காலத்தில் ரூ. 25 இலட்சம் நடைமுறைச் செலவு ஆகும்.

நிருவாகப் பயிற்சி நிறுவனம்

தமிழகத்தில் நிருவாகம், பயிற்சி, மேம்பாட்டுக்காக நிருவாகப் பயிற்சி நிறுவனம் (Institute of Management) ஒன்று அமைக்கப்படும். நிருவாகப் பிரச்சினைகளின் அடிப்படை அம்சங்கள் குறித்துப் போதனை, பல்வேறு அரசுத் துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் நிருவாகிகளுக்கான பயிற்சி அளித்தல், நிருவாகம் குறித்து ஆலோசனைகள் வழங்கல்,

சிறு தொழில்கள், விவசாயச் சார்புத் தொழில்கள் ஆகியவை களில் நிருவாக முறைகள், நுட்பங்களை மேம்படுத்தல் முதலியன இதன் பணிகளாகும்.

மேற்பார்வை அலுவலர்கள், நடுத்தர நிலை, உயர் நிலை நிருவாக அலுவலர்கள் ஆகியோரைப் பெறுவதில் போதிய ஏற்பாடு இல்லாத குறை இதன் மூலம் நீங்கும். இதற்கு ஆகும் செலவு வருமாறு :

ஆண்டு.	முதலீட்டுச் செலவு.	நடைமுதல் செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1973–74	5·00	3·00
ஐந்தாவது திட்டக் காலம்	30·00	75·00
ஆறாவது திட்டக் காலம் ..	22·50	145·00

ஆலோசனைகள் வழங்கும் வகையிலும் கட்டணங்கள் வசூலிப்பது மூலமும் இத்திட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ. 10 இலட்சம் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்விக்கு ஒரு கோயில்—சென்னைப் பல்கலைக் கழகம்.



பொருள் பரிசோதனை நிறுவனம்

தொழில் நுட்பம் மற்றும் பொறியியல் முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள், உற்பத்திப் பொருட்களைப் பரிசோதிப்பதற்காகச் சென்னையில் பொருள் பரிசோதனை நிறுவனம் (Meterials Testing Bureau) ஒன்று அமைக்கப்படும். பொறியியல் உற்பத்திப் பொருட்களின் தரம், இயக்க முறை ஆகியவகைகளைச் சோதித்து மதிப்பிடுதல், இந்தியத் தர நிர்ணய நிறுவனம் போன்றவைகளின் ஒத்துழைப்புடன் சோதனைப் பணிகளில் ஈடுபட்டுச் சான்றிதழ்கள் வழங்கல், உற்பத்திப் பொருள்கள் தரமேம்பாட்டுக்கு வழிவகை கூறல் முதலியன இந்த நிறுவனத்தின் பணிகளாகும். இதற்கு ஆகும் செலவு:

ஆண்டு.	முதலீட்டுச் செலவு.	நடைமுறைச் செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1973–74	*5·00*	*3·00*
5-வது திட்டக் காலம் ..	*43·00*	*50·00*
6-வது திட்டக் காலம் ..	*27·00*	*75·00*

பரிசோதனைக் கட்டணங்கள் மூலம் நடைமுறைச் செலவு ஈடு செய்யப்படும்.

மோட்டார் பொறியியல் மேம்பாட்டு நிறுவனம்

தமிழகத்திலுள்ள பெரிய மோட்டார் தொழில் நிறுவனங்கள் துணைக் கருவிகள் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மோட்டார் பொறியியல் மேம்பாட்டு நிலையம் (Centre of Automotive Engineering and development) ஒன்று அமைக்கப்படும்.

மோட்டார் வண்டிகள், பாகங்கள் ஆகியவைகளை நவீன முறையில் பரிசோதிக்க வசதி அளித்தல், மோட்டார் பொறியியல் குறித்து ஆராய்ச்சி வசதிகள் செய்தல், தொழில் நுட்ப விவாதங்களுக்கு ஒரு மேடையாகப் பயன்படுதல் முதலியன இதன் முக்கியப் பணிகளாக இருக்கும். மோட்டார் வண்டி வகைகள் என்பதில் டிராக்டர்கள், புல்டோசர்

கள், ஸ்கூட்டர்கள், மூன்று சக்கர வண்டிகள் ஆகியனவும் உள்ளடங்கும். இத்திட்டத்திற்குச் செலவு வருமாறு :

ஆண்டு.	முதலீட்டுச் செலவு.	நடைமுறைச் செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1973–74	10·00	3·00
5-வது திட்டக் காலம் ..	30·00	40·00
6-வது திட்டக் காலம் ..	8·50	54·00

நகர்த் தேவைப் பொறியியல் நிலையம்

நகர்ப்புறப் போக்குவரத்து, வீட்டு வசதி, நகர்ப் புறச் சுற்றுச் சூழ் சுகாதாரம் முதலிய சிக்கலான பிரச்னை களைக் கவனிப்பதற்காகவும் இவ்வகையில் அலுவலர்க்குப் பயிற்சித் தரவும் நகர்த் தேவைப் பொறியியல் நிலையம் (Centre for urban Engineering) ஒன்று அமைக்கப்படும். கிண்டி பொறியியல் கல்லூரி, டிராபிக் இஞ்சினீ யரிங் துறையினை மேற்கொண்டு, மேலும் அதனை விரிவுபடுத்துவதன் மூலம் இது ஏற்படுத்தப்படும். மாநிலத்தில் பெரு நகர்த் திட்டப் பகுதிகளிள் சம்பந்தப்பட்ட பணிகளிலும் இது பங்கு பெறும். மாநில அரசும் ஊராட்சி நிறுவனங்களும் இவ்வகையில் தெரிவிக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதும் இந்த நிலையத்தின் பணியாக இருக்கும். இதற்கு ஆகும் செலவு :

ஆண்டு.	முதலீட்டுச் செலவு.	நடைமுறைச் செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1973–74	5·00	2·00
5-வது திட்டக் காலம் ..	5·00	10·00
6-வது திட்டக் காலம் ..	..	10·00

கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவற்றின் வளர்ச் சியில் மாறி வரும் தேவைகளையும் உத்திகளையும் ஒட்டி, கல்வி நிருவாகம் குறித்தும் நிருவாகப் பிரச்னைகள் குறித்தும் தொடர்ந்து ஆய்ந்து வருவது அவசியமாகின்றது. இதற்

காக மாநில அரசு கல்வித் துறைச் செயலாளர் அலுவலகத்தில் கல்வித் திட்டச் செயற்குழு (Education Planning Cell) அமைக்கப்படும்.

கல்வியில் பல்வேறு நிலைகளுக்கிடையேயும் உறவு நிலையைப் பரிசீலிப்பது, மாணவர்களின் அறிவாற்றல் வளர்ச்சிக்குக் கருத்துக்களைத் தெரிவிக்கும் வண்ணம் பல்வேறு நிலைகளிலும் கல்வியின் செழும் பொருள் குறித்து ஆய்வு செய்தல், சிக்கனம், தரம், திறன் குறித்து ஆய்வு, முதியோர் கல்விக்கான வேலைத் திட்டங்கள் வகுத்தல், மருத்துவக் கல்வி, விவசாயக் கல்வி ஆகியவற்றுக்கான திட்டங்களைக் கருத்தில் கொண்டு, எல்லா நிலைகளிலும் கல்வி ஒருங்கிணைப்புக்கு உதவுதல் முதலியன இந்த செயற்குழுவின் பணிகளாகும். அரசு கல்வித் துறைச் செயலாளர் தலைமையில் இவ்வமைப்புச் செயல்படும். கல்வி பொருளாதார வல்லுநர் ஒருவர் இதன் நிருவாகத் தலைவராக இருப்பார். இத் திட்டத்துக்கு ஆகும் செலவு :

ஆண்டு.	முதலீட்டுச் செலவு.	நடைமுறைச் செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1973–74	1·00	2·00
5-வது திட்டக் காலம் ..	1·00	60·00
6-வது திட்டக் காலம் ..	1·50	75·00

கல்வித் துறை நிருவாகம்

கல்வி, பண்பாடு, விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவற்றை நிருவகித்துப் பேணி வருவதற்காக அமைச்சர்கீழும் கல்வித் துறைச் செயலாளர் கீழும் 6 இயக்ககங்கள் அமைய வேண்டும் என்ற அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அவையான:

1. தமிழ்நாடு விஞ்ஞான நிறுவனம் (Tamil Nadu Science Foundation).

2. கல்வி ஆராய்ச்சி பயிற்சிக்கான மாநில கவுன்சில்.

3. பள்ளிக் கல்வி, பள்ளிக்குப் புறம்பான கல்வி இயக்ககம்.

4. கல்லூரிக் கல்வி இயக்ககம்.

5. தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்.

6. நூலக இயக்ககம்.

கிராம மட்டத்தில் ஊராட்சி ஒன்றியமும் கல்வித் துறையும் தங்கள் அலுவல்களைப் பொதுப்படையாக குறிப்பாக மதிய உணவைப் பொறுத்தவரை ஒருமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். பள்ளிக் குழந்தைகளுக்குக் குறைந்த செலவில் அதிக ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்கச் செய்தல் வேண்டும். பள்ளிக் குழந்தைகளுக்கு ஊட்ட உணவு, மருத்துவப் பரிசோதனை வசதி ஆகியவற்றுக்காகக் கல்வித் துறையும் சுகாதாரத் துறையும் ஒருமுகமாகப் பணியாற்ற வேண்டும்.

தேர்வுமுறைச் சீர்திருத்தம்

கல்வித் துறையில் சீர்திருத்தங்கள் எந்த அளவுக்குப் பலன் தருகின்றன என்பதை மாணவர்களின் சாதனையை வைத்துத்தான்-அளக்கப்படக்கூடிய சாதனையை வைத்துத் தான்-மதிப்பிட முடியும். கல்வி நிறுவனங்களில் படிப்பைப் பொறுத்த வரை, மாணவர்களின் தேர்ச்சி நிலையை அளவிட்டுக் கணக்கிடுவதற்கு, எழுதும் தேர்வுதான் அளவுகோலாக இருக்கின்றது. இந்த எழுத்துமூலமான தேர்வு முறையானது, கல்வியின் நோக்கம் அறிவு வளர்ச்சி என்ற நிலைக்குப் பதிலாக, கல்வியின் நோக்கம் தேர்வில் வெற்றி பெறுவது என்று மாற்றிவிடுகின்றது. மாணவர்கள் ஆண்டு முழுதும் முனைப்பாகச் செயல்படுவதற்குப் பதிலாக, ஆண்டுக் கடைசியில் இரண்டு மாதகாலம் மட்டும் தீவிரமாக படிப்பது

என்ற நிலைக்கு வந்துவிடுகிறார்கள். மாணவர்களின் சாதனை நிலையை அறிவதற்கான முறையில் மாறுதல்தேவையாகின்றது.

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, மற்றும் பல நாடுகளில் தேர்வுக்கு செமெஸ்டர் (Semester) முறை நல்லதோர் ஏற்படாக இருந்து வருகின்றது. செமஸ்டர் என்றால் 6 மாத காலம் என்பது பொருள். 6 மாத கால அளவுள்ள எந்தப் படிப்பையும் செமெஸ்டர் முறையில் உள்ள படிப்பு என்று சொல்லலாம். ஆனால் இதில் கால அளவு மட்டும் முக்கியமல்ல. இதன் வேறு சிறப்பு அம்சங்கள், அந்தந்த மாணவரின் கல்வி அறிவு முன்னேற்ற நிலையை அந்தந்த ஆசிரியர் வகுப்பிலேயே தொடர்ந்து கவனித்து (Internal evaluation) மதிப்பிடுகிறார். செமெஸ்டர் கால முடிவில் கிரேடு தருகிறார். இதில் உரிய பாடங்களைத் தெரிந்தெடுத்துக்கொள்வதில் தாராள முறை உண்டு. ஒரே தடவை தேர்வில் வெற்றி அல்லது தோல்வி என்பதற்குப் பதிலாக ஒழுங்கு முறையான படிப்பு, ஆண்டு முழுதும் ஒரே முறையில் சுறுசுறுப்பாகச் செயல்படுதல், தன் முனைப்பான படிப்பு ஆகியவைகளுக்கு இது இடமளிக்கின்றது. இந்த ஏற்பாட்டில், மாணவன் தேர்வு எழுதுவதையும் ஒரு படிப்பாகக் கருதும் நிலை வருகின்றது. இந்தப் புதுமுறையினால் சில புதிய சிக்கல்களும் தோன்றலாம்.

பட்டதாரிகள் பெருகுகிறார்கள்

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களின்கீழ் உள்ள பொறியியல் கல்லூரிகளில் வகுப்பில் மதிப்பீடு முறையை யும் செமெஸ்டர் முறையையும் புகுத்த கடந்த 6 ஆண்டு களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. துவக்கக் கட்டங்களில் இந்த வகுப்பு மதிப்பீடு முறையும் அதே சம யத்தில் எழுத்து மூலம் தேர்வு எழுதும் முறையும் ஆக இரண்டும் ஒரே சமயத்தில் இருப்பது தவிர்க்க முடியாதது. சுய நிருவாகமுள்ள கல்லூரிகளில் இந்தத் திட்டத்தைப் புகுத்துவது நல்ல பலன்தரும். கோத்தாரி கமிஷன் இதை முக்கியமான பரிந்துரையாகக் குறிப்பிட்டுள்ளது.

வகுப்பில் மதிப்பீடு முறையில், கீழ்க்கண்டவாறு மதிப் பெண் முறையைப் பிரித்துக் கொள்ளலாம்.

	மதிப்பெண்.
வருகை நேரம், இதர நேரங்களைக் கடைப்பிடிப்பதில் ஒழுங்கு.	10 சதவிகிதம்.
பொது அறிவு ஆர்வம், சுறுசுறுப்பு, விவாதங்களில் பங்கு பெறல்.	10 ,,
தேர்வுகள்	50 ,,
கொடுக்கப்பட்ட வேலைகளைச்செய்து முடித்தல், ஆய்வுக்கான வேலை, ரிப்போர்ட், பிராஜக்ட் பணிகள்.	30 ,,

சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் (Indian Institute of Technology) தொடக்கத்திலிருந்தே செமெஸ்டர் முறையைக் கடைப்பிடித்து வருகின்றது. இம்முறை வெற்றிகரமாகவும் இயங்குகிறது.

செமெஸ்டர் முறையைப் படிப்படியாகவும் மிகுந்த கவனத்துடனும் மேற்கொள்ளலாம் என்று திட்டக் குழுவின் செயல் அணி பரிந்துரைத்துள்ளது. முதலில் மேல் பட்டப் படிப்பில் இதைச்செயல்படுத்தலாம் என்றும், பின்னர் படிப் படியாகக் கீழ்வகுப்புகளிலும் இதனைச் செயல்படுத்தலாம் என்றும் அதன்பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வியில் சேருவோர்-இடையில் விட்டு விடுவோர் விகிதம்

கல்வி நிலை.	பள்ளிப் பருவக் குழந்தைகள்.	பள்ளியில் சேருவோர்.	சேருவோர் சதவிகிதம்.	விட்டு விடுவோர்.	விட்டு விடுவோர் சதவிகிதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1972					
தொடக்கப் பள்ளி ..	58,03,491	54,90,102	94·60	19,21,536	35·00
நடுநிலைப் பள்ளி ..	26,30,687	14,62,662	55·60	2,04,773	14·00
உயர்நிலைப் பள்ளி ..	25,49,207	9,10,067	35·70	72,805	8·00
1973					
தொடக்கப் பள்ளி ..	59,47,040	57,68,629	97·00	19,90,177	34·50
நடுநிலைப் பள்ளி ..	26,52,328	16,21,898	61·15	2,23,922	13·80
உயர்நிலைப் பள்ளி ..	25,82,836	10,14,280	39·27	79,114	7·80
1974					
தொடக்கப் பள்ளி ..	51,64,376	51,64,376	100·00	17,55,887	34·00
நடுநிலைப் பள்ளி ..	27,22,688	21,34,587	78·30	2,90,303	13·60
உயர்நிலைப் பள்ளி ..	26,36,300	12,67,796	48·09	96,352	7·60

1975

தொடக்கப் பள்ளி ..	53,12,192	53,12,192	100·00	17,79,584	33·50
நடுநிலைப் பள்ளி ..	27,72,152	22,73,165	82.00	3,04,604	13·50
உயர்நிலைப் பள்ளி ..	26,76,572	13,67,244	51·08	1,01,176	7·40

1980

தொடக்கப் பள்ளி ..	61,68,640	61,68,640	100·00	19,12,278	31·00
நடுநிலைப் பள்ளி ..	31,86,200	31,86,200	100·00	3,95,088	12·40
உயர்நிலைப் பள்ளி ..	29,46,740	19,45,732	66·03	1,24,526	6·40

1983

தொடக்கப் பள்ளி ..	65,47,000	65,47,000	100·00	19,64,100	30·00
நடுநிலைப் பள்ளி ..	35,08,136	35,08,136	100·00	4,20,976	12·00
உயர்நிலைப் பள்ளி ..	31,83,372	23,87,529	75·00	1,43,251	5·00

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
600 008

தமிழரசு

இலவச இணைப்பு